# தொழில்நுட்பக் கல்வித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தேர்வு வாரியத் தலைவர்,<br>தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>கிண்டி, சென்னை – 600 025 | முதல்வர்கள்,<br>அனைத்து அரசு / அரசு நிதி உதவி<br>பெறும் மற்றும் சுய நிதி<br>பாலிடெக்னிக் கல்லூரிகள். |

**கடித எண். eFile–DOTE/829/2025–M1, நாள் 06-06-2025**

ஐயா / அம்மையீர்,

பொருள்: தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் – தேர்வுப் பிரிவு – பட்டயத் தேர்வுகள் – ஏப்ரல் 2025 பட்டயத் தேர்வுகளில் இறுதி பருவம் / துணைத் தேர்வினை எழுதிய மாணாக்கர்களில் நிலுவை வைத்துள்ள மாணாக்கர்களுக்கு சிறப்பு துணைத் தேர்வினை எழுத வாய்ப்பு வழங்குதல் – தொடர்பாக.

*****

ஏப்ரல் 2025 பட்டயத் தேர்வுகளில் இறுதி பருவம் / துணைத் தேர்வினை எழுதிய மாணாக்கர்களில் நிலுவை வைத்துள்ள மாணாக்கர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு நலன் கருதி, ஜூன் / ஜூலை 2025இல் சிறப்பு துணைத் தேர்வுகளை கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு நடத்தி, தேர்வு முடிவுகளை வெளியிட அனைத்து அரசு / அரசு நிதி உதவி பெறும் மற்றும் சுய நிதி பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வுகளுக்கு (Special Supplementary Exams) விண்ணப்பிப்பதற்கான கால அட்டவணை**

| | | |
|---|---|---|
| சிறப்பு துணைத் தேர்வுகளுக்காக (Special Supplementary Examination) இணைய வழியில் விண்ணப்பிக்க ஆரம்ப நாள் | : | 18.06.2025 புதன் |
| சிறப்பு துணைத் தேர்வுகளுக்காக (Special Supplementary Examination) இணைய வழியில் விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 23.06.2025 திங்கள் இரவு 11.59 வரை |
| தேர்வு நுழைவுச் சீட்டு (Hall Ticket) பதிவேற்றம் செய்யப்படும் நாள் | : | 25.06.2025 புதன் |
| கருத்தியல் தேர்வுகள் (Theory Examination) நடைபெறும் நாட்கள் | : | 30.06.2025 திங்கள் முதல் 16.07.2025 புதன் வரை |
| செய்முறைத் தேர்வுகள் (Practical Examination) நடைபெறும் நாட்கள் | : | 17.07.2025 வியாழன் முதல் 25.07.2025 வெள்ளி வரை |
| தேர்வு முடிவு வெளியிடப்படும் நாள் | : | 30.07.2025 புதன் |

**ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வுகளுக்கான (Special Supplementary Exams) தேர்வுக் கட்டணம்**

| வ. எண். | விவரம் | கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1. | விண்ணப்பக் கட்டணம் | 30/- |
| 2. | ஒரு பாடத்திற்கான தேர்வுக் கட்டணம் | 65/- |

**ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

- ஏப்ரல் 2025 பட்டயத் தேர்வுகளில் இறுதி பருவம் / துணைத் தேர்வினை எழுதிய மாணாக்கர்களில் நிலுவை வைத்துள்ள மாணாக்கர்கள் மட்டும் ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வினை எழுதுவதற்காக https://dipexamstndte.in என்ற இணையதள பக்கத்தில் இணைய வழியில் மட்டுமே மாணாக்கர்களே நேரடியாக விண்ணப்பித்து, அதற்கான கட்டணத்தினை இணைய வழியில் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- சிறப்பு துணைத் தேர்வினை எழுத பதிவு செய்த மாணாக்கர்கள் தங்களது தேர்வு நுழைவுச் சீட்டினை (Hall Ticket) https://dipexamstndte.in என்ற இணையதள பக்கத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- சிறப்பு துணைத் தேர்விற்கான கருத்தியல் தேர்வுகளை (Theory Exams) எழுதுவதற்காக தமிழகம் முழுவதும் உள்ள 38 மாவட்டங்கள் / புதுச்சேரி / காரைக்காலில் செயல்பட்டு வரும் அரசு / அரசு நிதி உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பிரத்யேக தேர்வு மையங்களாக குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு மையத்தினை தேர்வு செய்து, அத்தேர்வு மையங்களில் கருத்தியல் தேர்வுகளை எழுதலாம்.
- சிறப்பு துணைத் தேர்விற்கான செய்முறைத் தேர்வுகளை, மாணாக்கர்கள் தாங்கள் இறுதியாக பயின்ற கல்லூரிகளிலேயே தேர்வினை எழுதலாம்.

**<u>தேர்வுக்கால அட்டவணை</u>**

- ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வுகளின் கருத்தியல் தேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணைகளை https://dte.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

- ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வுகளின் செய்முறைத் தேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணைகளை மாணாக்கர்கள் தாங்கள் பயின்ற கல்லூரிகளை அணுகி அறிந்து கொள்ளலாம்.

- ஜூன் / ஜூலை 2025 சிறப்பு துணைத் தேர்வுகள் தொடர்பான ஐயப்பாடு ஏதேனும் ஏற்படின், **dipexamstndte@gmail.com** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்து உரிய விவரங்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

J.INNOCENT DIVYA, DIRECTOR-HO-DOTE(I), O/o. COMMISSIONER_HO_DOTE

**தேர்வு வாரியத்தலைவர்/ ஆணையர்**